மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி

(தேசிய பாடசாலை – மன்னார்)

முதலாம் தவணைப் பரீட்சை - 2019

கணிதம்

தரம் -6	சுட்டிலக்கம் -	நேரம் – 2மணித்தியாலம்

- **எல்லாவினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலே விடை எழுதுக.**

பகுதி I

1. வட்ட வடிவில் காணப்படும் இரண்டு பொருட்கள் தருக.

2. 4 இன் கூட்டல் பிணைப்புக்களைத்தருக.

3. "ஏழு மில்லியன் அறுபது" என்பதை நியம வடிவில் தருக.

4. சுருக்குக 648×100

5. பிற்பகல் 2.15 ஐ நேரத்தை சர்வதேச நியமமுறையில் தருக

6. கூட்டுக

நிமிடம்	செக்கன்
6	13
2	32

7. (-2) இற்கும் (+2) இற்கும் இடையிலுள்ள நிறைவெண்ணைத் தருக.

8. பிற்பகல் 2.05 இற்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட பஸ்வண்டி ஒன்று பிற்பகல் 3.40 இற்கு களுத்துறையை சென்றடைந்தது. பயணத்திற்கு எடுத்த காலம் யாது?

9. (-1) , 3 என்பவற்றை எண்கோட்டில் குறித்துக்காட்டுக.



10. 1835 எனும் எண்ணில் நூறினிடத்தில் இருக்கும் இலக்கம் யாது?

www.lkedu.lk


LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
வகுப்புக்கள்
Grade 1 - A/L
Medium
TAMIL / ENGLISH
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி
Call:
76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER

11. கிட்டிய பத்திற்கு மட்டந்தட்டுக

i) 75-..... ii) 34-.....

12. இறங்குவரிசையில் தருக.

2, 0, -2, 3

13. இடைவெளி நிரப்புக.

3600÷ ☐ =36

14. 50 மணித்தியாலத்தை நாள் , மணித்தியாலங்களில் தருக.

15. கிடைத்தளம் ஒன்றை சரிபார்ப்பதற்கு உபயோகிக்கப்படும் உபகரணத்தின் பெயர் யாது?

16. < அல்லது > இல் பொருத்தமான குறியீட்டை பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

i) (-2).....0

ii) (-4).....(-8)

17. 3,7,2,1 ஆகிய எண்களை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதக்கூடிய நான்கிலக்க மிகப்பெரிய எண்ணிற்கும் , நான்கிலக்க மிகச்சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

18. நேர்கோணமும் , செங்கோணமும் இணையும் போது உண்டாகும் பெரிய கோணம் எவ்வகையானது?

19. பின்வருவனவற்றில் கோணங்களை குறிக்கும் உருக்களின் கீழ் கோடிடுக.



i ii iii iv

20. 4> -1 எனும் சமனிலியை சொற்களில் எழுதுக.

40 × 2 = 80 புள்ளிகள்

www.lkedu.lk

பகுதி ii
ஐந்து வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

01. a) 74298152

i) மேற்குறிப்பிட்ட எண்ணை நியம முறையில் எழுதுக.

ii) அவ்வெண்ணை சொற்களில் எழுதுக?

b) 2999000001 எனும் எண்ணை வலயங்களாக எழுதி வேறுபடுத்திக் காட்டுக

c) 9, 7 , 4, 6, 8 எனும் இலக்கங்களில்

i. ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதப்படும் மிகப்பெரிய ஐந்திலக்க எண்ணை எழுதுக.

ii. அதில் 6 வகைக்குறிக்கும் பெறுமானத்தினை எழுதுக?

d) 7549 இவ்வெண்ணை இடப்பெறுமானத்தைக் கொண்டு எண்களை விரித்து எழுதுக.

2 + 2 + 2 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்

02. a) சுருக்குக.

i
$$\begin{array}{r} 1023 \\ +8914 \\ \hline \\ \hline \end{array}$$

ii
$$\begin{array}{r} 4752 \\ -\ 681 \\ \hline \\ \hline \end{array}$$

b) இடைவெளி நிரப்புக.

i
$$\begin{array}{r} 512 \\ \times\ 23 \\ \hline 153\square \\ 10\square 4 \\ \hline 11\square 7\square \\ \hline \end{array}$$

ii
$$12 \overline{)\ 564}$$
48
8□
84
0


www.lkedu.lk

c) இக் கூட்டலில் பெறப்பட்ட விடையினை எண்சட்டத்தில் குறித்துக்காட்டுக.

4183
+3014
_____

2 + 2 + 2 + 2 + 2 + 2 = 12 புள்ளிகள்

03. i)



மேலே தரப்பட்டுள்ள எண்கோட்டின் மீது குறித்த பெறுமானங்களை எழுதுக.

A=..... B=..... C=.....

ii) மேலே உள்ள A ,B, C இன் பெறுமானங்களிற்கு ஏற்ப "<" அல்லது ">" குறியீடுகளைப்பயன்படுத்தி நிரப்புக

i) A ☐ B
ii) B ☐ C
iii) C ☐ A

iii) ஒரு குறிப்பிட்ட நாளில் சில நகரங்களில் காணப்பட்ட வெப்பநிலை கீழே தரப்பட்டுள்ளது.

நகரம்		வெப்பநிலை
x	=	6^0c
y	=	-1^0c
z	=	3^0c

இவ்வெப்பநிலைகளை பொருத்தமான எண்கோட்டை வரைந்து குறித்துக்காட்டுக.

iv) எண்கோட்டைப் பயன்படுத்தி பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக
-5 , 0 , 1 ,-2 , 3 , 4

3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்

04. i) சுருக்குக

a
மணி நிமிடம்
3 15
+ 4 45
_____
_____

b
நாள் மணி
10 10
+ 2 7
_____
_____

c
மணி நிமிடம்
5 40
- 3 10
_____
_____

d
நிமிடம் செக்கன்
10 30
- 5 50
_____
_____

www.lkedu.lk

ii) சுமதி ஒரு நாளைக்கு 45 நிமிடமாக 4 நாட்கள் விளையாட்டுப்பயிற்சியில் ஈடுபட்டார். நிமாலி ஒரு நாளைக்கு 30 நிமிடமாக 6 நாட்கள் விளையாட்டுப்பயிற்சியில் ஈடுபட்டார். இருவரும் பயிற்சியில் ஈடுபட்ட முழுநேரம் யாது?


iii) 2019 ஐப்பசி 09 ஆம் திகதி என்பதை சர்வதேச நியமமுறைப்படி எழுதுக.

iv) 16:50 மணியை சாதாரண மணித்தியாலக்கடிகாரத்தில் குறிப்பிடுக.

2 + 2 + 2 + 2 + 2 + 1 + 1 = 12 புள்ளிகள்


05. a)

i) திசைகோளின் அம்புக்குறி வடக்குத்திசையைக் காட்டும் எனின் D , G , A காட்டும் திசையைக் குறிப்பிடுக.



ii) உபதிசைகளைக்காட்டும் மூன்று எழுத்துக்களைக் குறிப்பிட்டு அதன் திசைகளைப் பெயரிடுக.

b)



A யிலிருந்து B வரை செல்லும் போது கிழக்குத்திசையை நோக்கி திரும்பும் எண்ணிக்கைக்கும் ,தெற்குதிசையை நோக்கி திரும்பும் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

3 + 3 + 3 + 3 = 12 புள்ளிகள்

www.lkedu.lk

06. a தரப்பட்டுள்ள உருவில் புயங்கள் , உச்சியைக் குறித்துக்காட்டுக.



b) உமது சூழலில் செங்கோணத்தை அவதானிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

c) ஒருவன் வடக்கிலிருந்து தென்கிழக்கிற்கு திரும்புவானாயின் அதனைக் குறிக்கும் கோணம் யாது?

d) வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டிப் பெறப்பட்ட எண் 30 ஆகும்.

i) அவ்வகுப்பிலுள்ள மாணவர்களின் மிகக்குறைந்த எண்ணிக்கை யாது?

ii) அவ் வகுப்பிலுள்ள மாணவர்களின் மிகக்கூடிய எண்ணிக்கை யாது?

$3 + 3 + 2 + 2 + 2 = 12$ புள்ளிகள்

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...